1984 மார்ச் 23]

விடை—

(அ) 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் நூலகச் சட்ட விதி 45-ன் படி ஒரு இடத்தில் கிளை நூலகம் திறக்க அங்கு மக்கட் தொகை 5,000 அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

(ஆ) திட்ட மானியத்தின் கீழும் நூலக ஆணைக்குழு நிதியிலிருந்தும் 21 கிளை நூலகங்கள் திறக்கப்படவுள்ளன. இவை தவிர, 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 275 இடங்களில் நூலக ஆணைக்குழுக்களின் நிதி நிலைக்கு ஏற்ப, கிளை நூலகங்கள் திறக்கவும், பொது நூலக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்(.

2. தகவல் கோரல்.

[அ] இராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விளக்கக் கூட்டம்.

திரு. ப. நெடுமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராம பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கைப் பிரதிகள் கட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்படும் என்று முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கிடையில், 8-4-1984 அன்று தமிழகம் எங்கும் ராம் பிரசாத் ராவ் கமிஷன் பற்றி விளக்கக் கூட்டங்கள் நடத்தப் போவதாக ஆளும் கட்சித் தரப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிஷனுடைய அறிக்கை உறுப்பினர்களுக்கு கிடைக்காத நிலையில், வெளியிலே இருப்பவர்களுக்கு எப்படி கிடைக்கிறது ? அதைப்பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டசபையில் வைக்கப்பட்ட கருத்தையொட்டித்தான் அவர்கள் விளக்கக் கூட்டம் போடப் போகிறார்களே தவிர, வேறு அல்ல. அவர்களைக் கூட்டம் போடக் கூடாது என்று சொல்ல முடியாது.